விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 198 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 20 வியாழக்கிழமை (04.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## இலங்கை - இந்தியா இடையில் விரைவில் கப்பல் சேவை

### ஜெய்சங்கர் தெரிவித்ததாக அமைச்சர் நிமல் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான விரைவில் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்ஜெய்சங்கர் 16

## சம்பந்தனின் புகழுடல்
## யாழ்ப்பாணத்தில் இன்று அஞ்சலிக்காக வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இராஜவரோதயம் சம்பந்தனின் புகழுடல் இன்று வியாழக்கிழமை கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படவுள்ளது.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அன்னாரின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் அன்னாரின் புகழுடல் விமானம் 15

## தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட
# வரலாற்று அநீதிகளுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படும்

### கென்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் எலியட் கோல் பேர்ன் உறுதி



*(லண்டன்)*

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க கென்சர்வேட்டிவ் கட்சி உறுதியாகவுள்ளது என அக்கட்சியின் வேட்பாளர் எலியட் கொல்பேர்ன் தெரிவித்துள்ளார். *(16ஆம் பக்கம் பார்க்க)*

## பண வீக்கம் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் கடந்த மே மாதம் 0.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த பணவீக்கம், ஜூன் மாதம் 1.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதன்படி கடந்த மே மாதம் பூச்சிய 15

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலையானது நேற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் WTI ரக மசகு எண்ணெய்பீப்பாய் ஒன்றின் விலை 83.02 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண் 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு தடை விதிக்குக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி பதவிக் காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தடை விதிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் முக்கிய வர்த்தகர் ஒருவர் இந்த மனுவை நேற்று தாக்கல் செய்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டத்தில் நிலவும் குறைபாடு ஒன்றின் காரணமாக, ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் ஐயப்பாடு இருப்பதாக அண்மையில் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இதன்படி தற்போதுள்ள ஜனாதிபதியின் பதவிக் காலம் இன்னும் ஓராண்டுக்கு நீடிக்கப்படலாம் 15

## படகு கவிழ்ந்ததில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### குறிகாட்டுவானில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானில் இருந்து நயினாதீவுக்கு பொருட்கள் ஏற்றிச் சென்ற படகு ஒன்று கவிழ்ந்ததில் ஒருவர் கடலில் மூழ்கிப் பரிதாபகரமாக 15

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி
## 3ஆம் கட்ட அகழ்வு பணி இன்று ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வாய்வின் மூன்றாம் கட்டப்பணிகள் இன்று மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு 15

## யுக்திய நடவடிக்கை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

யுக்திய நடவடிக்கை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதுஎன பொது மக்கள் பாதுகாப்பு 16

## பனையோலை எடுத்த வேளை
## கருங் குளவிக் கொட்டுக்கு இலக்கான பெண் மரணம்
### பண்டத்தரிப்பில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் கருங் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பெண்ணொருவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்

பண்டத்தரிப்பு செட்டிக் குறிச்சி பகுதியைச்சேர்ந்த குணசேகரம் வரத சுரோன் மணி (வயது-67) என்ற 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் பதவிகளில் 3 பெண்கள் நியமனம்

- சிறுவர் நன்னடத்தை ஆணையாளராக சுஜீவா
- போக்குவரத்து ஆணையாளராக காஞ்சனா
- பிரதிப் பிரதம செயலாளராக எழிலரசி





வட மாகாணத்தில் உயர் பதவிகளில் மூன்று பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திற்கான இரண்டு திணைக்களங்களின் ஆணையாளர் பதவிக்கும், மாகாண பிரதிபிரதம செயலாளர் பதவிக்கும், புதிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் நேற்று வழங்கிவைத்தார்.

வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி சி.சுஜீவா அவர்களும், வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளராக திருமதி கு.காஞ்சனா அவர்களும், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (நிர்வாகம்) திருமதி.அ. யோ.எழிலரசி அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கிவைக்கப்பட்டன.

(ம-7,10,33)

# தென்னை விவசாய ஆலோசனை நிறுவனம் யாழில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னை விவசாய ஆலோசனை சேவைகள் நிறுவனம் நேற்று யாழில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

றக்கா லேன் பொஸ்கொ பாடசாலை, இளங்கதிர் சனசமூக நிலையம் முன்பாக உள்ள வீதியில் நிறுவனமானது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

பல்லாண்டு பயிரான தென்னை, கமுகு, போன்ற நீண்ட காலப்பயிர்களுக்குரிய விளைச்சலை கூட்டு வதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல், தென்னையையும் ஏனைய விவசாய பயிர்களையும் நட்டு நீண்ட கால பராமரிப்புக்குரிய செலவீன மதிப்பீடு செய்தல், தவணை கட்டண அடிப்படையில் பணம் அறவீடு போன்ற விடயங்களை செயற்படுத்தல், என்பன இடம்பெறவுள்ளதுடன் இச் செயற்பாடுகளுக்கு பயனாளிகளுடன் ஒப்பந்தம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த ஆலோசனைகள் ஒவ்வொரு புதன்கிழமையும் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக தகவல்களை தெரிந்து கொள்ள ஜெ. சக்தியேந்திரன் (தென்னை ஆலோசகர்) T.P - 077 505 6263, Whatsapp No 0760561510 அல்லது email - jekatheesan1234 rosa@yaahoo.com தேவராசா (விவசாயஆலோசகர்) T.P- 077 377 1147 ஆகியோருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

# அரசியலமைப்பை மீறி ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

ஜனாதிபதியும் அவரது அடிமைகளும் அரசியலமைப்பையும் மீறி ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சித்து வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை நடாத்துவதற்கு இடையூறு விளைவிக்கும் அரசாங்கத்தின் சதி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை விடுக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அறிக்கையில், கடந்த காலங்களில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அடிமைகளும், கையாட்களும், சகாக்களும் நாட்டுக்கு எதிர்மறையான செய்திகளை முன்வைத்து ஜனாதிபதி தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற கருத்தை உருவாக்கி வந்தனர். பல சந்தர்ப்பங்களில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல என மக்களை நம்பவைக்கும் வகையில் அரசியல் செயற்திட்டமொன்றை முன்னெடுக்க ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமான குழுக்களும் முயற்சித்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் இன்று சட்ட ரீதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் நடத்தப்பட வேண்டிய ஜனாதிபதி தேர்தலை பறிக்க மேலும் பல முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசியலமைப்பை மீறும் சதிகளாகும். செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதித்தேர்தலை நடத்த வேண்டும் என்று அரசியலமைப்பு தெளிவாக கூறினாலும்,

அரசியலமைப்பு ரீதியாக புதிய ஜனாதிபதியை தெரிவு செய்யும் நாட்டு மக்களுக்கு இருக்கும் உரிமையை இல்லாதொழித்து, சீர்குலைக்க சில குழுக்கள் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இந்நாட்டில் சர்வஜன வாக்குரிமையும் மக்களின் வாக்குரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். இந் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மாளிகைகளுக்குள் இருந்து கொண்டு மானங்கெட்ட சதிகள் மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான பின்னணி தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், இந்நாட்டில் ஜனநாயகத்தின் மரணத்தை முன்னெடுக்க வேண்டாம் என பொறுப்புள்ள அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

தேர்தல் உரிமையை உடனடியாக மக்களுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சுதந்திரமான மற்றும் ஜனநாயக ரீதியாக தேர்தலொன்றை நடத்துவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளையும்,

ஜனநாயகம் என்ற பெயரில் பயப்படாமலும், அடிமைப்படாமலும் 220 இலட்சம் நாட்டு மக்களுக்காக வேண்டி எடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு மற்றும் இது தொடர்பான அனைத்து அதிகாரிகளிடமும் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றார். (ம-7,10)


# மரண அறிவித்தல்



பிறப்பு 30 - 07 - 1950

இறப்பு 03 - 07 - 2024

## கந்தசாமி கனகராஜா

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெளுக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகராஜா அவர்கள் நேற்று (03.07.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - நேசமலர் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - நவமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கோபிநாத் மற்றும் தர்சன்(முகாமைத்துவ உதவியாளர் - நீதவான் நீதிமன்றம் சாவகச்சேரி), உதயநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சட்டத்தரணி தர்சிகா(பதிவாளர் - மாவட்ட/ நீதவான் நீதிமன்றம் மன்னார்), ரேணுகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தியானா, யாதனா, வைஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் கைலாயநாதன், தனலட்சுமி, சிறிபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (04.07.2024) வியாழக்கிழமை அன்னாரின் சொந்த ஊரான சுதுமலை வடக்கு மானிப்பாயில்(வெள்ளுவடி வீதி) அமைந்துள்ள அவரது பூர்வீக இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தர்சன் (மகன்)
077 627 2629

தகவல்
குடும்பத்தினர்

(132)


# யாழ், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கி வைப்பு




யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அரசாங்க அதிபர்களாக நியமன கடிதம் பிரதமர் தினேஸ் குணவர்தனவால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக எஸ். முரளிதரன் பிரதமரிடமிருந்து நியமனக் கடிதத்தை நேற்று பெற்றுக்கொண்டனர்.

(ம-7,10,33,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி நிறுவுனர் தினம் பரிசளிப்பு விழா நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி முதல்வர் செல்லையா இளங்கோ தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் நிறுவுனர் இந்து போர்ட். சு. இராசரத்தினத்தின் 140 ஆவது பிறந்த நாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று பிற்பகல் 3 மணிக்கு சங்க ஆராதனை மண்டபத்தில் சைவத்திய விருத்திச் சங்கத்தின் தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# வருடந்தோறும் சுமார் 3 ஆயிரம் பேர் விபரீத முடிவுகளால் உயிரிழப்பு!


## சுகாதார அமைச்சினால் புள்ளி விபரம் வெளியீடு

(கொழும்பு)

**ஒவ்வொரு வருடமும் தற்கொலைகளால் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கின்றனர்.**

ஜூலை முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படும் தேசிய காயம் தடுப்பு வாரத்தின் போது இந்த புள்ளி விவரம் சுகாதார அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

தற்கொலைகள் ஒரு குறிப்பிடத்தக்க பொது சுகாதார சவாலாக இருப்பதாகவும் இந்த ஆபத்தான போக்கை எதிர்த்து போராடி முறியடிக்க சமூக விழிப்புணர்வுத் திட்டங்கள், தற்கொலை தடுப்பு உத்திகளை சமூக மட்டத்தில் ஏற்படுத்த வேண்டும் என சுகாதார அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (நி-6)



## சம்பந்தனின் பூதவுடலுக்கு பாராளுமன்றில் அஞ்சலி



(கொழும்பு)

இரா.சம்பந்தனின் பூதவுடல் நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்திற்கு எடுத்து வரப்பட்ட நிலையில் சம்பந்தனின் பூதவுடலுக்கு சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றோர் அஞ்சலி செலுத்தினர். (நி-6)

## அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - வஜிர அழைப்பு

(கொழும்பு)

நாடுதொடர்பிலும் நாட்டு மக்கள் தொடர்பிலும் சிந்தித்து, அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்களை மீட்டெடுத்த தேசிய தலைவர் தற்போதைய ஜனாதிபதி.

நாடு நெருக்கடியை எதிர்நோக்கிய போது எவரும் நாட்டை பொறுப்பேற்க முன்வராத சந்தர்ப்பத்தில் பாரிய சவாலுக்கு மத்தியில் நாட்டை பொறுப்பேற்று மக்களை நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்தவர்.

எனவே நாடு தொடர்பிலும் மக்கள் தொடர்பிலும் சிந்தித்து அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேண்டும்.


ஜனாதிபதி முன்னெடுத்து வரும் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மாத்திரமன்றி நாட்டின் ஏனைய கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கி செயற்படுகின்றனர் என் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார். (நி-6)

# இலங்கை ஆசிரியர்களுக்கு மாலைதீவில் வேலைவாய்ப்பு

(மலேசியா)

இலங்கையிலிருந்து தகுதியான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்ய மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மாலைதீவிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மாலைதீவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் பெல்பொலகே ரங்க சுஜீவ குணவர்தன மொஹமட் முய்சுவிடம் நற்சான்றிதழ் பத்திரங்களை கையளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.



மேலும், இலங்கையிடமிருந்து கல்வித் துறையில் கூடுதல் ஆதரவைப் பெற விருப்பம் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துதல், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதாரம் உட்பட இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களை கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது மாலைதீவுக்கு தகுதியான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் குறிப்பிட்ட முக்கியத்துவம் அளித்து, கல்வித் துறையில் கூடுதல் ஆதரவைப் பெறுவதற்கான தனது விருப்பத்தை மொஹமட் முய்சு தெரிவித்துள்ளார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் 26 ஜூலை 1965 இல் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ரணில் பெரமுனவில் இணைந்தால் வேட்புமனு தொடர்பில் பரிசீலிக்கலாம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி பொதுஜன பெரமுன கட்சியில் அங்கம் வகிக்கும் பட்சத்தில் அவருக்கு ஜனாதிபதி வேட்புமனுவை வழங்குவது குறித்து பரிசீலிக்கலாம் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




மேலும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தாம் குறிப்பிட்ட ஒருவரை முன்வைக்கவில்லை. அத்துடன் எந்த நேரத்திலும் சரியான நபரை முன் வைக்கலாம் எனவும், தமது கட்சி மொட்டு சின்னத்திலே வேட்பாளரை முன்வைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கை வீராங்கனைகள் இருவர் ஒலிம்பிக் போட்டியில்







2024 ஆம் ஆண்டு பாரிஸில் நடை பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கையிலிருந்து இரு வீராங்கனைகள் தகுதி பெற்றுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனடிப்படையில் தருஷி கருணாரத்னமற்றும் டில்ஹாணி லேகம்கே ஆகிய இருவரே இவ்வாறு தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தருஷி கருணாரத்ன ஒலிம்பிக்கில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்க உள்ளதாகவும், ஈட்டி எறிதல் போட்டியில் டில்ஹாணி லேகம்கே பங்கேற்க உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## காலிறுதியில் போர்த்துகல் ஓய்வு குறித்து மனம் திறந்த ரொனால்டோ



நடப்பு ஐரோப்பிய சம் பியன்ஷிப் கால்பந்துத் தொடரே தனது கடைசி யூரோ கிண் ணக் கால்பந்துத் தொடர் என போர்த்துகல் அணி யின் நட்சத்திர வீரர் கிறிஸ் டியானோ ரொனால்டோ தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டி யின் போதே அவர் குறித்த அறிவிப் பினை வெளியிட் டுள்ளார்.

ஜேர்மனியில் தற்போது நடை பெற்றுவரும் யூரோ கிண்ண கால்பந்து தொடரில் போர்த்துகல் அணி ஸ்லோவேனியாவை பெனால்டி ஷூட்அவுட் முறையில் வெற்றிபெற்று கால்இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

மேலும் கால் இறுதிப் போட்டியில் மிகவும் பலம்வாய்ந்த பிரான்ஸ் அணியை போர்த்துகல் அணி எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி நாளை மறுதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நெதர்லாந்து அபாரம்



யூரோ கிண்ணத் தொடரில் ருமேனியாவை வென்ற நெதர்லாந்து அணி, காலி றுதிக்கு முன்னேறியது.

ஜேர்மனியின் முனிக்கில் நேற்று முன்தினம் நடந்த "ரவுண்டு-16" போட்டியில் நெதர்லாந்து, ருமேனிய அணிகள் மோதின. போட்டி துவங்கிய 20 ஆவது நிமிடத் தில் சைமன்ஸ் கொடுத்த பந்தை பெற்ற கோடி கேப்கோ, கோலாக மாற்ற, நெதர்லாந்து அணி முதல் பாதியில் 1-0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இதைச் சமன் செய்ய, ருமேனிய வீரர்கள் எடுத்த எந்த முயற்சிக்கும் பலன் கிடைக்கவில்லை. மாறாக மீண்டும் அசத்தினர் நெதர் லாந்து அணியினர். போட்டி யின் 83 ஆவது நிமிடத்தில் பந்தை லாவகமாக கொண்டு சென்ற கேப்கோ, ருமேனிய கோல் ஏரியாவுக்குள் இருந்த மாலெனுக்கு "பாஸ்" செய் தார்.

பந்தை பெற்ற வேகத்தில், அப்படியே வலைக்குள் தள்ளி கோல் அடித்தார் மாலென். முடிவில் நெதர்லாந்து அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, காலிறு திக்குள் நுழைந்தது. இதில் ஆஸ்திரியா அல்லது துருக் கியை ஜூலை 6 ஆல் சந்திக்க உள்ளது. (நி-6)

## விம்பிள்டன் டென்னிஸ் போட்டி
### உபாதையால் வீராங்கனைகள் விலகல்



விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. இதில் முன்னணி வீராங் கனைகளான பெலாரசின் அரினா சபலென்கா மற்றும் பெலாரசின் விக்டோரியா அசரென்கா ஆகியோர் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினர்.

பெலாரசின் விக்டோரியா அச ரென்கா, அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்சுடன் மோத இருந்தார். தசைப்பிடிப்பால் அவதிப்பட்ட அவர் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

இதேபோல், பெலாரசின் அரினா சபலென்கா, அமெரிக்காவின் எமினா பேக்தாசுடன் மோத இருந்தார். காயம் காரணமாக சப லென்காவும் போட்டியில் இருந்து விலகினார்.

முன்னணி வீராங்கனைகளான அரினா சபலென்கா, விக்டோரியா அசரென்கா ஆகியோர் காயம் காரணமாக முதல் போட்டியில் இருந்து விலகியது இரசிகர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

சமீபத்தில் நடந்த பெர்லின் ஓபன் தொடரிலும் சபலென்கா காயம் காரணமாக கால்இறுதியில் இருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக் கது. (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சத்திரசிகிச்சை நிபுணர்கள் பற்றாக்குறை

# ஆபத்தில் இதய நோயாளிகள்!

(கொழும்பு)

**இதய சத்திர சிகிச்சைக்காக காத்திருக்கும் நோயாளிகளின் காத்திருப்புக் காலம் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.**

நாட்டில் தற்போது கொழும்பு தேசிய மருத்துவமனை, கராப்பிட்டி, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

ஆனால், நாட்டில் குறைந்த எண்ணிக்கையிலான இதய சத்திரசிகிச்சை நிபுணர்கள் மற்றும் மயக்க மருந்து நிபுணர்கள் இருப்பதால் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருப்புப் பட்டியலில் காத்திருக்க வேண்டியுள்ளது.

இதனால் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

சில மருத்துவமனைகளில் காத்திருப்போர் பட்டியல் 2029 ஆம் ஆண்டு வரை நீடிக்குமெனவும், இது தொடர்பில் அவதானம் செலுத்தி அரச மற்றும் தனியார் துறையினருடன் இணைந்து சத்திர சிகிச்சைத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)


## யாழ்ப்பாணம் மாநகரசபை

### நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவகால தற்காலிக கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2024

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ கால தற்காலிக கடைகள் அமைப்பதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விகளுக்கான விண்ணப்ப படிவங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

- கேள்விப்படிவக்கட்டணம் : ரூபா 1,000.00 + Vat 18%
- கேள்விப்படிவம் விநியோகிக்கும் திகதி :- 04.07.2024 தொடக்கம் 18.07.2024 வரை (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.30 மணிவரை)
- கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் :- 19.07.2024 முற்பகல் 10.00 மணிவரை
- கேள்விப்படிவம் திறத்தல் :- 19.07.2024 முற்பகல் 10.00மணிக்கு
- மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 2,000.00
  - விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு நானாவித இறைவரி பகுதியில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியினுள் 19.07.2024 **முற்பகல் 10.00 மணிக்கு** முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.
  - கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் கடிதம் மூலம் அனுமதியளிக்கப்பட்ட ஒருவர் சமூகமளித்தல் வேண்டும்.
  - கேள்வியில் சித்தி பெற்றவர்கள் தாங்கள் சித்தி பெற்ற சகல கடைகளுக்குமான கேள்வித் தொகையினை 25.07.2024 ஆம் திகதிக்கு பி.ப 2.30 மணிக்கு முன்னர் முன்னரங்கப் பகுதியில் முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். தவறும் சந்தர்ப்பத்தில் தாங்கள் எந்தவொரு கடையையும் பெற்றுக் கொள்ள முடியாது.

மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகளை மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

(சி-731)

மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.


# மதுவரித் திணைக்களத்தின் வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை மதுவரித் திணைக்களம் இந்த வருடத்தின் இது வரையான காலப் பகுதியில் 105 பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளது என இலங்கை மது வரி திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 17 பில்லியன் ரூபாய் அதிகரிப்பாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# இராசிபலன்

04.07.2024
ஆனி 20, வியாழக்கிழமை
திரயோதசி காலை 6.25 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 5.31 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.52 மணிவரை
சுபநேரம் 7.27-8.57 மணி வரை
இராகுகாலம் 1.27-2.57 மணிவரை
சந்திராஷ்டமம் சித்திரை

வளவன்

**மேஷம்:** எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்.

**கடகம்:** பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் பெருகி வளம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும்,மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்:** பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது,கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதம் ஏற்படலாம்.

**மகரம்:** செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்,மறைமுகப் போட்டிகள் மாறும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும், எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள்,பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**சிம்மம்:** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,உற்சாகத்துடன் பணிபுரிந்து பாராட்டுப் பெறுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்:** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம்,தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்,எண்ணங்கள் எளிதில் கைகூடும் நாள்

**மிதுனம்:** வெளியில் புறப்படும் போது யாராவது வந்து உதவிகள் கேட்டு தொந்தரவு பண்ணலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்,மனச் சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**கன்னி:** தொழிலில் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுபவர்கள் மனம் மாறுவர், பணவரவு எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவ முன்வரலாம்.

**தனுசு:** இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர்,அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

உன்பெயர் தான் வியாபார அடையாளம் அதை உயிர் போல் காப்பாற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடப்பட்ட வெதுப்பகங்கள் மீள இயங்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

பொது சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கு அமைய திருத்த வேலைகளை பூர்த்தி செய்த இரு பேக்கரி உரிமையாளர்களிற்கும் தலா ரூ.80 ஆயிரம் தண்டம் அறவிட்டதுடன் குறித்த பேக்கரிகளை தொடர்ந்து இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 12.06.2024 ஆம் திகதி நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, மேற்பார்வை பொது சுகாதார, பரிசோதகர் தலைமையிலான குழுவினால் கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள வெதுப்பகங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய 2 வெதுப்பகங்கள் இனங் காணப்பட்டன. குறித்த வெதுப்பகங்களிற்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்குகள் கடந்த 24.06.2024 அன்று தாக்கல் செய்யப்பட்டன.

வழக்கினை விசாரித்த நீதிவான் ஒரு பேக்கரியை மூடி சீல்வைக்குமாறும், மற்றைய பேக்கரியை விரைந்து திருத்தி அமைக்குமாறும் அதேவேளை குறித்த வழக்கினை 03.07.2024 ஒத்தி வைத்தார்.

நேற்று வழக்குகள் மீள விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது நீதிவான் செ. லெனின்குமார் இரு பேக்கரி உரிமையாளர்களிற்கும் தலா 80,000/= தண்டம் அறவிட்டதுடன், திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டமையால் பேக்கரிகளை தொடர்ந்து இயங்க அனுமதி வழங்கினார். (நி-6-33)

# பேருந்து நிலையத்தில் அடாவடித்தனம் - 4 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் இளைஞர்கள் குழு ஒன்று அமைதியின்மையை ஏற்படுத்துவதாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலின் பிரகாரம் பேருந்து நிலையத்திற்கு விரைந்த பொலிஸ் குழு அங்கு அமைதியின்மையை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களை கைது செய்ய முயற்சித்த போது, இளைஞர்கள் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலில் இரு பொலிஸார் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நான்கு இளைஞர்களையும், பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டமை, கடமைக்கு இடையூறு விளைத்தமை, பொது இடத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள நான்கு இளைஞர்களும் திருகோணமலையை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-6)

# தொழிற்பயிற்சி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பாடசாலையை விட்டு விலகியவர்கள், மேற்படிப்புக்களை தொடர முடியாதவர்கள் மற்றும் வேலைவாய்ப்புக்கள் இன்றி இருப்பவர்களிற்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள தொழில்வாய்ப்பினை அடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் நடத்தப்பட்டு வருகின்றது.

2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான முழு நேரக் கற்கைநெறிகள் கடந்த 01.07.2024 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிகள் யாழ். மாவட்டத்தில் கைதடி, காரைநகர், வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பூநகரி பழைய கச்சேரி, பளை மற்றும் கிளிநொச்சி ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக் கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான முழுநேர பயிற்சிநெறிகளாகும்.

கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 12.07.2024 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல 12 கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது மாவட்ட அலுவலகம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சி அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக் கொள்வதற்கு 021 222 7949, தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அதன் பிரதிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

# காணி உறுதிமோசடி இருவர் மறியலில்

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வசித்துவரும் ஒருவருக்குச் சொந்தமான காணியை, ஆள்மாறாட்டம் செய்து உரிமை மாற்றம் செய்த சகோதரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழைச் சேர்ந்த நபரொருவர் புலம்பெயர்ந்து வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார்.

தனது காணிக்கான அற்றோனித்தத்துவ அதிகாரத்தை தனது ஒன்றுவிட்ட சகோதரிக்கு வழங்கியிருந்தார். இந்த நிலையில், காணி உரிமையாளரின் சொந்தச் சகோதரி பிறிதொரு தேவையைக் காரணம்காட்டி ஒன்றுவிட்ட சகோதரியிடமிருந்து உறுதியைப் பெற்றுச்சென்று மோசடியாக உரிமை மாற்றம் செய்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், காணி மோசடி செய்த சகோதரி மற்றும் ஆள் மாறாட்டம் செய்வதற்கு உதவிய பிறிதொரு பெண்ணையும் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில் யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் நீதவான் ஆனந்தராஜாவின் முன்னிலையில் கைதான இருவரையும் முற்படுத்தப்பட்ட போது, 10 ஆயிரம் ரூபாவுக்காகவே தான் ஆள்மாறாட்டத்தில் ஈடுபட்டதாக ஆள் மாறாட்டம் செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பெண் ஒப்புக் கொண்டார். இதையடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (நி-6-33)

## தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஏற்பாட்டில் மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.மாட்டின் வீதியிலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (நி-6)

# ஈழத்து தமிழ்க் கவிதை களஞ்சியம்- 2 ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகினால் 2024 ஆம் ஆண்டு ஈழத்து தமிழ்க் கவிதை களஞ்சியம் பாகம்-2 எனும் நூல் தொகுக்கப்படவுள்ளது.

ஈழத்து தமிழ்க் கவிதை களஞ்சியம் பாகம்-2 எனும் தொகுப்பினுள் அச்சிடுவதற்கு தங்களிடமுள்ள 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையுள்ள ஈழத்து மரபுக் கவிதைகளை உள்ளடக்கிய ஆக்கங்கள் நூலுருவில் காணப்படின் குறித்த ஆக்கங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதிர்வரும் 2024.07.14 ஆம் திகதிக்கு முன் பிரதிப் பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் அலகு, கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக தகவல்களுக்கு 021 205 4105 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (நி-6)


## சிறுமி மாயம் பொலிஸில் முறைப்பாடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் 15வயதான மாணவியைக் காணவில்லை என நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நித்திரைக்குச் சென்ற மேற்படி மாணவியை காலையில் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)




நாதஸ்வர மேதை கலாநிதி எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது. இந் நிகழ்ச்சி அவரது திருவுருவச்சிலை திறப்பும், எம்.பஞ்சாபிகேசன் எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் மூத்த நாதஸ்வரக் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘காதல்’ என்ற பெயரில் பாதிப்பிற்குள்ளாகும் சிறுமிகள்

## எச்சரிக்கை விடுக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

**(கொழும்பு)**

**16 வயதுக்குட்பட்ட சிறுமிகளில் 85 வீதமானோர் காதல் என்ற பெயரில் துஷ்பிரயோகத்துக்குள்ளாகுவதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் உடனடியாக பொலிஸாருக்கு தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு மாபெரும் பொறுப்பு உள்ளது.



எனவே சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்க முயற்சி எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# கல்விக்கு இடையூறு விளைவிக்கும் நாசகார செயற்பாடுகளுக்கு இடமில்லை

## ஆசிரியர்களை எச்சரித்த ஜனாதிபதி

(கொழும்பு)

பாடசாலைக் கல்வியின் போது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கல்விக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்ற ஆசிரியர் நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி எந்தவிதமான நாசகார செயற்பாடுகளுக்கும் இடமளிக்கப் போவதில்லை என தெரிவித்தார். ஒழுக்கத்துடன் பணியாற்றுங்கள் ஒழுக்கமில்லாமல் கல்விச் சேவையை நடத்த முடியாது.

கோட்டாபய ராஜபக்ஷ 2022 இல் சம்பள உயர்வு வழங்கிய ஒரே துறை. இந்த வருடம் அனைவருக்கும் 10,000 ரூபாய் உதவித் தொகையை இருமுறை வழங்கினோம்.

அடுத்தநாளே பணிப்புறக்கணிப்பு. அவர்கள் இப்படி விளையாடுவது நல்லதல்ல. நான் சட்டமா அதிபருடன் கலந்துரையாடினேன்.

இதனால் சிங்களப் பிள்ளைகளின் கல்விக்கே கேள்விக்குறி. ஏனைய மொழி பாடசாலைகள் உரிய பணியை தொடர்கின்றனர்.

காலை 7.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை யாரும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வகுப்புகளை சீர்குலைக்க முடியாது சட்டத்தினை உருவாக்க ஆலோசனைகளை வழங்கி உள்ளேன். வருங்கால சந்ததியினருக்காக நாம் அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

இதற்குப் பிறகு என் மீது கோபம் கொள்ள வேண்டாம், இந்த விடயத்தில் நான் இன்னும் கடுமையாக நடந்து கொள்வேன் என தெரிவித்தார். (நி-6)

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL **உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974** (1375)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 2 காங்கேசன்துறை வீதி 984 எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பி.தியாகராசஐயர் என ஆதனப் பதிவேட்டில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை பாக்கியநாதன் பரந்தாமன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2001.01.30 இல் 1883 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் விஸ்தீரணம் நிலப்பரப்பு 2 குளி 4.2 அளவுடைய ஆதனம் எனது நினைவிற்கெட்டாத காலத்தில் இருந்து எனது ஆட்சியில் உள்ளது என்றும், குறித்த ஆதனத்தை எனது மூதாதையரும் பின் தானும் இடையீடின்றித் தொடர்ச்சியாகவும் எவரது தலையீடோ குழப்பமோ இன்றியும் எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும், எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உரித்தாகவும் உடமை கொண்டு ஆண்டனுபவித்து வருவதனால் ஆட்சியுரிமைப்படி இவ்வாதனம் எனக்குரியதென வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் இலக்கம் 996 காங்கேசன்துறை வீதியைச்சேர்ந்த பாக்கியநாதன் பரந்தாமன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் 2010.07.26 ஆம் திகதி 3976 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் மேற்படி அதே அளவுகொண்ட ஆதனத்தை அதே இடத்தைச் சேர்ந்த தனது சகோதரி சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்பவருக்கு அழியா நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்னை வடகிழக்கு இறை “மூன்றாம் விளாத்தியடி” நிலப்பரப்பு இரண்டு குளி நான்கு தசம் இரண்டு (நில.பர.2 குளி 4.2) ஆம் கடைக்கட்டடங்களும், பயிர்வகைகளும் இந்த நிலப்பரப்பு 2 குளி 4.2 இற்கும் எல்லை.

கிழக்கு தம்பிப்பிள்ளை கைம்பெண் இராசநாயகத்திற்கும் பெண் கனகலட்சுமிக்கும் எனக்குமுரிய ஆதனங்கள்
வடக்கு - எனக்குரிய வேறு ஆதனம்
தெற்கு - பி.தியாகராஜா ஐயருக்குரிய ஆதனம்
மேற்கு - காங்கேசன்துறை வீதி

இதனடங்கலும் இதைச்சேர்ந்தவைகளும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ.என். குழந்தைவேலு அவர்களால் அளந்து வரையப்பட்ட 14 ஆம் இலக்கப்படத்தில் 1 ஆம் இலக்கத் துண்டாகச் சுட்டப்பட்டுள்ளது.

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்பவர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுந்தரலிங்கம் சுந்தரகுமார் பெண் பவானி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

(C-729)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 50 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L, Business.<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்.<br>தொ.இ: B/14620 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 66<br>7 இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc, Engineer<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர், வைத்தியர், பட்டதாரி<br>தொ.இ: G/14626 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 56 1/2<br>1 இல் செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/14622 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>3 இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L. சுயதொழில்<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகன்<br>தொ.இ: G/14628 |
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>11 இல் செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L, கோவில் நிர்வாகி<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14624 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: O/L, beautician<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், வெளிநாடு<br>தொ.இ: G/14635 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இம்ரான்கானை உடனடியாக விடுவிக்க வேண்டும் பாகிஸ்தானுக்கு கோரிக்கை விடுத்த ஐ.நா.குழு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமருமான இம்ரான் கான் பல்வேறு வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டு, கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் சிறையில் உள்ளார்.

இதற்கிடையே, முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் தடுப்புக் காவல் தன்னிச்சையானது மற்றும் சர்வதேச சட்டத்தை மீறுவதாக உள்ளது.

எனவே அவரை உடனடியாக விடுதலை செய்து இழப்பீடு வழங்கவேண்டும் என தன்னிச்சையான தடுப்புக்காவல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும், ஏப்ரல் 2022 இல் இம்ரான்கான் வெளியேற்றப்பட்டதிலிருந்து அவருக்கு எதிராக தொடரப்பட்ட பல வழக்குகள் குறித்து ஐ.நா. குழு தீவிர கவலைகளை எழுப்பியது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் குழுவின் இந்தக் கோரிக்கைக்கு பாகிஸ்தானின் அரசு, இது உள்நாட்டு விவகாரம் என பதிலளித்துள்ளது. (நி-6)

## 15 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு ஏலம் போன பாடகரின் காலணி



(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பொப் பாடகரும் நடிகருமானவர் எல்விஸ் பிரெஸ்லி. தன்னுடைய இன்னிசையால் 19 ஆம் நூற்றாண்டு ரசிகர்களை தன்னுடைய காலடியில் கட்டிப்போட்டு வைத்திருந்தார்.

1950 களில் அவர் மேடை ஏறி பாடியபோது ஊதா நிறத்திலான காலணிகளை அணிவது வழக்கம்.

இந் நிலையில் எல்விஸ் பிரெஸ்லி பயன்படுத்திய அந்த காலணிகள் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவரினால் சமீபத்தில் ஏலத்துக்கு விடப்பட்டது.

ஏலம் விறுவிறுப்பாக நடந்த நிலையில் அந்த ஒரு ஜோடி காலணியை அவரின் அதிதீவிர ரசிகர் ஒருவர் 15 ஆயிரம் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் ஏலம் எடுத்தார். (நி-6)

## பாணிப்பூரிக்கு கர்நாடகவில் தடை



(டில்லி)

கர்நாடக சுகாதாரத்துறையினரால் மாநிலம் முழுவதிலும் உள்ள 250 பாணிப்பூரி மாதிரிகள் பெறப்பட்டு நடத்திய பரிசோதனையில் 40 மாதிரிகளில் புற்றுநோயை உண்டாக்கும் காரணிகள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆய்வில் நீலம், Tartrazine போன்ற இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கோலி பிளவரை வைத்து செய்யப்படும் கோபி மஞ்சூரியன் மற்றும் சிக்கன் கபாப் போன்ற பிற தின்பண்டங்களில் இதுபோன்ற காரணிகள் இருந்ததால் அவற்றை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டதை போல் பாணிப்பூரியிலும் புற்றுநோய் நிறமூட்டும் காரணிகள் இருப்பதால் கர்நாடக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுகாதார அமைச்சகம் கேட்டுகொண்டுள்ளது.

இதனை தொடர்ந்து கர்நாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டு ராவ் முழுமையான பரிசோதனை அறிக்கை கிடைத்ததும் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார். அதே நேரத்தில் பொதுமக்கள் தங்கள் உடல் நலனில் தனி அக்கறை எடுத்து உடல் நலத்தை பாதிக்கும் உணவுப் பொருட்களை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் எனவும் தூய்மை மற்றும் சுகாதாரத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். பலர் விரும்பி உண்ணும் பிரபலமான வட இந்திய உணவான பாணிப்பூரியில் புற்றுநோயை உண்டாக்கும் பொருட்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் பாணிப்பூரியை விரும்பி உண்ணும் நபர்களுக்கு கவலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும் பாணிப்பூரியை தடை செய்யவும் சுகாதார துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். கடந்த மாத தொடக்கத்தில் பஞ்சு மிட்டாய், கோபி மஞ்சூரியன், கபாப் தயாரிப்பில் செயற்கை வண்ணங்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நேட்டோ தலைவரை வாழ்த்திய ஜெலென்ஸ்கி



(கீவ்)

நேட்டோவின் பொதுச் செயலாளராக பதவியேற்றுள்ள மார்க் ரூட்டேவுக்கு உக்ரைன்ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நெதர்லாந்தின் முன்னாள் தலைவருடன் பேசிய உக்ரைன் ஜனாதிபதி ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிலிருந்து உக்ரைனுக்கு வழங்கிய ஆதரவிற்காக ரூட்டேவுக்கு நன்றி தெரிவித்தார்.

"உக்ரைனுக்காக அவர் தனிப்பட்ட முறையில், அவரது அரசாங்கம் மற்றும் நெதர்லாந்து மக்கள் செய்த அனைத்திற்கும் நான் அவருக்கு மனப்பூர்வமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

"அனைத்து சரியான நேரத்தில் மற்றும் பெரிய அளவிலான பாதுகாப்பு, மனிதாபிமான மற்றும் அரசியல் ஆதரவு. நேட்டோவின் புதிய பொதுச்செயலாளருடன் நாங்கள் தொடர்ந்து தொடர்பில் இருப்போம்." எனவும் அவர் தெரிவித்தார். (நி-6)

## பிரேசிலில் வெள்ளப்பெருக்கு 179 பேர் பலி: 33 பேர் மாயம்



(பிரேசில்)

பிரேசில் நாட்டில் கடந்த மே மாதம் முதல் பருவமழை கொட்டித்தீர்த்து வருகிறது. குறிப்பாக அந்நாட்டின் தெற்கு மாகாணமான ரியோ கிராண்டிடு சுல் நகரில் கனமழை பெய்து வருகிறது. கனமழை காரணமாக நகரின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரேசிலில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி இதுவரை 179 பேர் உயிரிழந்துள்ளனர்.

33 பேர் மாயமாகியுள்ளனர். மாயமானவர்களை தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். (நி-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## கமலா ஹரிஸ்

# அமெரிக்க ஜனாதிபதியாக அதிக வாய்ப்பு

### கருத்துக்கணிப்பில் தகவல்



**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக உள்ள இந்தியா மற்றும் ஆப்பிரிக்க வம்சாவளியை சேர்ந்த கமலா ஹாரிஸுக்கு ஜனாதிபதி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது என கருத்துக் கணிப்பு வெளியாகியுள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெற உள்ள நிலையில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும், குடியரசுக் கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் களம் காண்கின்றனர்.

இவர்கள் இருவருக்கும் இடையிலான நேரடி விவாத நிகழ்ச்சி கடந்த ஜூன் 28 ஆம் திகதி நடந்தது. ஜோ பைடன் இந்த நிகழ்ச்சியில் பலமுறை திக்கித் திணறி பேசத் தடுமாறினார். சில நொடிகள் அப்படியே ஸ்தம்பித்து நின்றார்.

81 வயதாகும் ஜோ பைடன் சமீப காலங்களாகவே தடுமாற்றத்துடனேயே காணப்படுகிறார்.

எனவே இந்த விவாத நிகழ்ச்சியால் பைடன் இந்த நிலைமையில் மீண்டும் தேர்தலில் போட்டியிட வேண்டுமா என்ற விமர்சனக் குரல்கள் எழத் தொடங்கியுள்ளன.

இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பைடன் அதன்பின் ஆற்றிய உரையிலும் கூட டெலிபிராம்டரில் END OF THE QUOTE - உரை முடிந்தது என்று எழுதப் பட்டிருந்ததையும் சேர்த்து வாசித்தது சர்ச்சையாகியுள்ளது.

அவரது கட்சிக்குள்ளிருப்பவர்களே பைடன் ஜனாதிபதித் தேர்தலில் நிற்காமல் இருப்பதே நல்லது என்று கருத்து கூறி வருகின்றனர்.

மேலும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிட்ச்சல் ஒபாமா பைடனுக்கு பதில் ஜனாதிபதி வேட்பாளராக நிற்க வேண்டும் என்றும் சிலர் விரும்புகின்றனர்.

பைடனின் தடுமாற்றம் அமெரிக்க மக்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் சிஎன்என் தொலைக்காட்சி தற்போது கருத்து கணிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி தற்போது அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக உள்ள இந்தியா மற்றும் ஆப்பிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸுக்கு ஜனாதிபதி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

சிஎன்என் கருத்துக் கணிப்பின்படி, ட்ரம்பா பைடனா என்ற கேள்விக்கு 49 சதவீதம் பேர் ட்ரம்புக்கும் 43 சதவீதம் பேர் பைடனுக்கும் ஆதரவளித்துள்ளனர்.

அதேசமயம் ட்ரம்பா கமலா ஹாரிஸா என்ற கேள்விக்கு 47 சதவீத வாக்காளர்கள் ட்ரம்புக்கு ஆதரவாகவும். 45 சதவீத வாக்காளர்கள் கமலா ஹாரிஸ் ஜனாதிபதி ஆகலாம் என்றும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ட்ரம்பை விட வெறும் 6 சதவீத வித்தியாசத்தில் மட்டுமே கமலா ஹாரிஸ் உள்ளார். ட்ரம்பை விட மிட்ச்சல் ஒபாமா 11 புள்ளிகள் முன்னிலையில் உள்ளார்.

ஆனால் அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. மேலும் கமலா ஹாரிஸுக்கு பெண் வாக்காளர்களின் ஆதாரவு கணிசமாக உள்ளது. எனவே கமலா ஹாரிஸ் அமெரிக்க ஜனாதிபதியாக அதிக வாய்ப்பு உள்ளது என்று இதன் மூலம் தெரிய வருகிறது. (நி-6)

## கென்யா அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் உயிரிழப்பு





(நைரோபி)

கென்யாவில் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களில் 39 பேர் உயிரிழந்தனர் என்று கென்யா தேசிய மனித உரி மைகள் ஆணையம் தெரி வித்துள்ளது.

மேலும் 360 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

கென்யா பாராளுமன்றத்தில் சர்ச்சைக்குரிய நிதி மசோதாவை தாக்கல் செய்வதற்கு எதிராக கடந்த வாரம் போராட்டம் வெடித்தது. இந்த மசோதாவுக்கு எதிராக பாராளுமன்றத்தின் வெளியே போராட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

திடீரென அவர்கள் பாராளுமன்ற வளாகத்திற்குள் புகுந்தனர். அப்போது அங்கிருந்த பொலிஸார், பொது மக்களை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் ஆத்திரமடைந்த போராட்டக்காரர்கள், பாராளுமன்ற கட்டடத்திற்கு தீ வைத்தனர்.

இதனால் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் 27 பேர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும், கென்யா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வரி உயர்வு மசோதா திரும்ப பெறப்படுவதாக அந்நாட்டு ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ அறிவித்தார். இந்த நிலையில், அரசுக்கு எதிராக பொது மக்கள் நடத்திய போராட்டத்தில் மொத்தம் 39 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பாண்டில் இதுவரை

# 3,974 டெங்கு நோயாளர்கள் யாழில் அடையாளம்

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு

**(கொழும்பு)—— வட, மற்றும் மேல் மாகாணங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.**



இவ்வருடத்தின் ஜனவரி மாதத்திலிருந்து ஜூன் மாதம் வரையான காலப் பகுதிக்குள் 28,239 டெங்கு நோயார்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 6,344 டெங்கு நோயாளர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் 3,974 டெங்கு நோயாளர்களும் கம்பஹா மாவட்டத்தில் 2,820 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 10 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 300 | 300 | 250-320 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 200 | 190 | 220 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 150 | 150-200 | 240 |
| தக்காளி | 500 | 600 | 650 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 160 | 140 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 250 | 300 |
| கரட் | 350 | 600 | 650 | 400 | 600 |
| பூசணி | 140 | 200 | 180 | 150 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 200 | 150 | 130-150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 400 | 300-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 200 | 240 | 200 |
| பாகற்காய் | 1200 | 800 | 1200 | 800 | 1400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 550 | 500 | 550 | 350 | 600 |
| பீற்றூட் | 600 | 650 | 700 | 500 | 600 |
| கறிமிளகாய் | 800 | 700 | 750 | 450 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 1000 | 400-600 | 1000 |
| போஞ்சி | 800 | 750 | 700 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 40 | 50 | 80 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 500-700 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 70 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 500 | 400 | 300 | 500 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 200 | 200 | 300 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 172



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## சித்தர்கள் சிந்தனை

சார் அங்கே என்ன ஒரு கூட்டம்? இது ஒருத்தர் கேள்வி அதுவா? அந்த வீட்டிலே ஒரு வயதானவர் இருந்தார் அல்லவா? அவர் மூச்சுவிட மறந்து விட்டாராம் இது ஒருவருடைய வேடிக்கையான பதில். இவரும் ஒரு நாள் அப்படி மறந்து விடப் போகின்றவர் தான். இருந்தாலும் இப்போது அதை நினைத்து அதுக்காக கவலைப்பட்டுக் கொண்டிருக்க இவர் தயாராக இல்லை.

மூச்சு என்றால் அது சாதாரண விடயமா?அது போய்விட்டால் இந்த உலகத்திலே அவருக்கு இனி வேலை இல்லை என்று தான் அர்த்தம். மனித உடம்பில் மூச்சு எப்படி இயங்குகிறது? உள்ளே போய்வருகின்ற காற்று இந்த உடம்பை எப்படி நடமாட்டத்திலே வைத்திருக்கின்றது? இது ஒரு தனி ஆராய்ச்சி. ஒரு கட்டத்தில் உயிர் உடம்பை விட்டுப் பிரிந்து விடும். அப்படி என்றால் உடம்பையும் உயிரையும் அது வரைக்கும் ஏதோ ஒன்று இணைத்து வைத்திருக்கின்றது. அது ஒரு இரகசியமான உறக்கம். Suspended animation catalepsy. இது சம்மந்தமான ஆராய்ச்சியில் நிபுணர்கள் யார் தெரியுா? சித்தர்கள்.

உடம்புக்குள்ளே இருக்கின்ற இரகசியங்களை அவர்களை விட பெரிதாக யாரும் சொல்லி விடவில்லை. மனித உடம்புக்குள்ளே 72000 நாடி நரம்புகள் இருப்தாக சித்தர்கள் கணக்கு சொல்கின்றார்கள். இதில் முக்கியமானது எத்தனை என்று கேட்டால் இருபத்துநான்கு. அது சரி இந்த இருபத்துநான்கிலே அப்படி என்ன விடயம்? இந்த இருபத்துநான்கு நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் மாதிரி இல்லாமல் எப்போதும் தூக்கத்திலேயே அதாவது உறக்கத்திலேயே இருக்கின்றதாம். இந்த இருபத்துநான்கு நாடி நரம்புகளில் 10 நாடிகள் மேல் நோக்கி இருக்கின்றதாம். 10 நாடிகள் கீழ் நோக்கி இருக்கின்றது. மீதி நான்கு இருக்கின்றதே அது நான்கு பக்கத்திற்கு இரண்டு இரண்டாகப் பிரிந்து போய் பாம்பு மாதிரி சுற்றி வளைந்து கொண்டு இருக்கிறதாம். அதிலே தான் உயிரோட ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கின்றதாம்.

இந்த இருபத்துநான்கு நாடி நரம்பிலேயும் 10 மிகவும் முக்கியமானது. அந்த பக்கத்திலே மூன்று மிகவும் முக்கியம். இந்த மூன்றுக்குள்ளே தான் அந்த இரகசியமான உறக்கம் புதைந்து கிடக்கின்றதாம். இந்த மூன்றும் எங்கள் உயிரை உடம்போடு இணைத்துக் கொண்டு இயங்குகின்றதாம். இந்த நாடிகளோட மூன்று வாயுக்களுக்கும் மூன்று பெயர் உண்டு.

இடக்கலை, பிங்கலை, கழுமுனை. சந்திரன், சூரியன், அக்கினி என்று இதை சொல்வதுண்டு. இடது நாசியிலே இயக்குகின்ற மூச்சு இடைகலை, வலது நாசியிலே இயங்குகின்ற மூச்சு பிங்கலை, கழுமுனை என்பது இரண்டு நாசியிலேயும் வந்து போய் இயங்குகின்ற சுவாசம். இந்த மூன்று மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நமது சித்தர்கள் சொல்லியிருக்கிற இரகசியத்தையெல்லாம் வெளிநாட்டுக்காரர்கள் ஆராய்ச்சி செய்கின்றார்கள். சிறிது காலத்திற்கு முன் லெனின் கிராட் பல்கலைக்கழகத்திலே இருந்து டாக்டர் மெஸ்லிங் என்று ஒருவர் இந்தியாவுக்கு வந்தாராம். அவர் ஒரு விஞ்ஞானப் பேராசிரியர். இமயமலைச் சாரலிலே வந்து சிறுது காலம் தங்கினாராம்.

அங்கே உள்ள சில யோகிகளிடம் பழகினராம். Self induced cataleptic state என்கிற மூச்சு வித்தையைப் பற்றி தெரிந்து கொண்டு போனாராம். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? இந்தியாவிலே இருக்கிற சித்தர்கள் பல வாரங்கள் மூச்சு விடாமலே, மரக்கட்டை மாதிரி, உயிர் இருந்தும் இல்லாததும் மாதிரி, ஒரு யோகசமாதி நிலையிலே இருக்கிறார்கள். என்னாலே இப்போது மூன்று நாள் வரையிலே இருக்க முடியுது. அதற்கு மேலேயும் அது மாதிரி இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னாராம். இந்த மூன்று மூச்சுக்களைப் பற்றி சித்தர்கள் நூலிலே இன்னும் பல இரகசியங்கள் இருக்கிறதாம்.


வளர்பிறையிலே முதல் மூன்று நாள், அதாவது அமாவசை கழித்து மறு நாளிலே இருந்து மூன்று நாள் காலையிலே எந்த நாசி எப்படி இயங்குகின்றது என்ற கணக்கை சொல்லியிருக்கிறார்களாம். நான்காம் நாளிலிருந்து ஆறாம்நாள் முடிய இது மாறும். அதன் பின் ஏழாம் நாளிலே இருந்து முதல் மூன்று நாட்கள் மாதிரி மறுபடியும் இயங்கும். இப்படியே மூன்று மூன்று நாட்களுக்கு இந்த இடக்கலையும் பிங்கலையும் மாறிமாறி ஒரு சட்டதிட்டத்தின் படி வேலை செய்கிறது.

இப்படி இருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக்கின்றது என்று அர்த்தம். இந்த இரண்டைத் தவிர கழுமுனை என்கின்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குவதற்கும் ஒரு வாய்ப்பாடு இருக்கிறது. அதெல்லாம் இருக்கட்டும். காலையிலே எழுந்ததும் எந்த மூச்சு எப்படி இழையுது என்பதை வைத்து சில விடயங்களை புரிந்து கொள்ள முடியுமாம். இப்போது உதாரணத்துக்கு ஒரு இரவு முழுவதும் ஒரு நாசியிலே மூச்சு ஓடிக் கொண்டிருந்தால் அந்த உடம்புக்கு மூன்று வருடத்திற்கு மேலே உயிராற்றல் இல்லை என முடிவு செய்து விடலாம். இரவு முழுவதும் இடகலையும் பகல் முழுவதும் பிங்கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தால் அந்த மனிதன் ஆறு மாத்திலேயே மரணத்தை நெருங்குகின்றான் என்று அர்த்தம். இரண்டு கண்ணையும் அமுத்தினால் கண்ணீர் வர வேண்டுமாம். வரவில்லை என்றால் அந்த உடம்புக்கு 10 நாளிலே முடிவு வந்துவிடுமாம். ஆகாயத்திலே இருக்கின்ற நட்சத்திரம் பார்வைக்குத் தெரியவில்லை என்றால் ஐந்து நாளிலே மரணம். மூக்கு நுனி தெரியவில்லை என்றால் மூன்று நாளிலே முடிவு. இப்படி எல்லாம் சொல்கிறதாம் சித்தர் இலக்கியம். இது மாதிரி அறிகுறி ஏதாவது தெரிந்தால் உடனே சித்தர்கள் மூச்சு இயக்கத்தை சரி செய்து கொள்வார்களாம்.

நாமெல்லாம் இதை முடிந்த அளவுக்கு புரிந்து கொண்டால் நீண்ட நாள் ஆரோக்கியமாக இருக்கமுடியும். இந்தத் தகவலை கேட்டு கொண்டு உடனே உங்கள் மூச்சு எப்படி ஓடிக்கொண்டிருக்கிறது என்று பார்த்து விட்டு தப்பாக புரிந்து கொண்டு பயந்து விடாதீர்கள். ஒருவர் அப்படித் தான் ஓடி வந்தார். சார் எனக்கு அப்படி தான் மூச்சு வித்தியாசமாக ஓடிக் கொண்டிருக்கிறது. பயமாக இருக்கிறது என்றார். எப்படி இடகலையா,பிங்கலையா , கழுமுனையா என்று என்று கேட்டேன். இது மூன்றும் இல்லை. அது நான்காவது விதமாக இருக்கிறது. வாய்வழியாக மூச்சு ஓடிக்கொண்டு இருக்கிறது என்றார். கொஞ்சம் கவனித்துப் பார்த்ததற்கு பின்பு தான் விடயம் புரிந்தது. அவருக்கு கடுமையான ஜலதோஷம் அது தான் மூக்கு அடைபட்டு போய் வாய் வழியாக சுவாசம் செய்து கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக உணவுத்திட்ட பிரதிநிதி குழு கிளிநொச்சிக்கு விஜயம்



(கண்டாவளை)


உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி Abdur rahim siddiqui உள்ளிட்ட உலக உணவுத் திட்ட அதிகாரிகள் நேற்று முன்தினம் கிளி நொச்சி மாவட்டத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

முன்னதாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு வருகைதந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரனை சந்தித்து கலந்துரையாடிருந்தனர். கலந்துரையாடலின் பின்னர் கனகாம்பிகைக் குளம் பிரதேசத்திற்கான கள விஜத்தினை மேற்கொண்டிருந்தனர்.

உலக உணவுத்திட்டத் தின் கீழ் தோட்டச் செய்கையினூடாக பாடசாலைகளுக்கு வழங் கும் உணவுகளுக்கு மரக்கறி களை வழங்கும் பொருட்டு உலக உணவுத் திட்டத்தின் ஊடாக வாழ்வாதார உதவிகள் கிடைக்கப் பெற்று திறமையாக செயற்பட்டு வருகின்ற கனகாம் பிகை பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயியின் தோட்டத்தை பார்வையிட்டதோடு அறுவடையினையும் மேற் கொண்டிருந்தனர்.

(நி-6-315)

# காணிகள் கையளிப்பு தொடர்பில் ஆராய்வு



(கண்டாவளை)

பூநகரி செம்மண் குன்று அரசபுரம் பகுதியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிய காணிகளை உரியவர்களிடம் மீளகையளிப்பதற்கான முன்னாயத்த சந்திப்பு அரசபுரம் முன்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

பூநகரி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் செக்காலை, கருமாரி, ஈநொச்சி, அரசபுரம், பளுவில், பத்தினிப்பாய் ஆகிய கிராமங்களை சேர்ந்த 200 இற்கும் அதிகமான காணிகளின் உரிமையாளர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் உரிமைப் பத்திரங்களை கைவசம் வைத்துள்ளோர், அதற்கு பதிலாக பதிவு ஆவணங்களை வைத்துள்ளோர் மற்றும் ஆவணங்கள் எதுவும் இல்லாதோர் என மூன்று வகையாக அடையாளம் கண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் மீளக் குடியேற விரும்புவோர் தமது காணி எல்லைகளை குறிப்பிட்டு கிராம சேவகர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும் இச்சந்திப்பில் அறிவுறுத்தப்பட்டது. (நி -6)



கிளிநொச்சி தெற்கு வலய தமிழ் மொழித் தின எழுத்தாக்க போட்டியில் பிரிவு ஐந்தில் கவிதை ஆக்கத்தில் முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவி சாள்ஸ் அபிசாயினி முதலிடம் பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளதுடன் பிரிவு 5 சிறுகதையாக்கத்தில் இதே பாடசாலை மாணவி நந்தகோபாலன் நிலோஜினி இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

படம்: கிருஸ்ணகுமார்

# ஏற்று நீர்ப்பாசன பயிர்ச்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபடும் விவசாயிகள்

(அக்கராயன்)

கிளிநொச்சி கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நீண்ட காலமாக செயலிழந்து இருந்த இப்பயிர்ச் செய்கை தற்போது நடை முறைப் படுத்தப்பட்டு வரும் நிலையில் விவசாயிகள் ஏற்று நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். அக்கராயன் குளத்தில் இருந்து ஏற்று நீர்ப் பாசனம் மூலம் பயிர்ச்செய்கைக்கு நீர் வழங்கப்படுவதால் தற்போது 50 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை முன்னெடுக்கப்படும் நிலையில் 150 ஏக்கர் வரை இப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே அக்கராயன் குளத்தில் இருந்து கண்ணகைபுரம் மேட்டுப் பயிர்ச் செய்கைக்கான நீர் விநியோகமும் கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாறிலும் ஏற்று நீர்ப்பாசனம் மூலம் திருவையாறு குளத்தில் இருந்து நீர் விநியோகிக்கப்பட்டு பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதேபோன்று அக்கராயன் கிராம அலுவலர் பிரிவிலும் அக்கராயன் மத்தி, மேற்கு, கொங்காதரன் குடியிருப்பு பகுதிகளுக்கு ஏற்று நீர்ப்பாசன திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(நி-6-350)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3158

Search for people, places and things

## வருணியா




## கார்த்திகா




## அகரன்




## அக்ஷயா




## மதுமிதா




## தண்விகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 526



வந்தியத்தேவனையும், இளவரசரையும் பார்ப்பதற்கே அவளுக்குச் கூச்சமாயிருந்தது. ஆகையால் படகு சென்ற திசையையே பார்த்த வண்ணம் துடுப்பைப் போட்டுக் கொண்டிருந்தாள். அதுகாறும் கப்பல் நின்ற இடத்தை நோக்கிச் சென்ற படகு இப்போது திசை திரும்பித் தென் மேற்குப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தது.

இருட்டுகிற நேரத்தில் கடலிலிருந்து பூமிக்குள் குடைந்து சென்ற கால்வாயின் உள்ளே பிரவேசித்தது. பூங்குழலி கூறியது போலவே அங்கே இருபுறமும் கரைகள் உயர்ந்த மேடாக இருந்தன. அந்த மேட்டுக் கரைகளில் மரங்கள் அடர்த்தியாகவும், உயரமாகவும் வளர்ந்திருந்தன.

படகைக் கரையோரமாக நிறுத்திவிட்டுப் பூங்குழலி மெல்லிய குரலில், "ஐயா சற்றுப் படகைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுக் கரையில் இறங்கினாள். கரையில் வளர்ந்திருந்த உயரமான ஒரு மரத்தின் மேல் ஏறிச் சுற்று முற்றும் பார்த்தாள். பிறகு அவசரமாக இறங்கி வந்தாள். "நல்லவேளை! இங்கே வந்தோம். கடற்கரையோரமாகச் சுமார் ஒரு காத தூரத்துக்கு ஆட்கள் நின்று காவல் புரிகிறார்கள். கலங்கரை விளக்கின் அருகில் ஒரே கூட்டமும் கோஷமுமாக இருக்கிறது!" என்றாள்.

"யாராயிருக்கும் என்று ஏதாவது தெரிகிறதா?" என்று வந்தியத்தேவன் ஆவலுடன் கேட்டான்.

"நன்றாய்த் தெரியவில்லை, ஆனால் பழுவேட்டரையரின் ஆட்களாய்த்தான் இருக்கவேண்டும். வேறு யாராயிருக்க முடியும்? எப்படியிருந்தாலும், நான் சொன்ன இடத்துக்கு முதலில் போய்ச் சேருவோம். இரவு இரண்டாம் ஜாமத்துக்குள் நான் என் வீட்டுக்குப் போய் எல்லாவற்றையும் நிச்சயமாய்த் தெரிந்து கொண்டு வருகிறேன்" என்றாள்.

"பெண்ணே! உன்னை யாராவது பார்த்து விட்டால், என்ன செய்கிறது? உனக்கு ஏதேனும் இச்சமயம் நேர்ந்துவிட்டால், எங்கள் கதி அதோகதி தான்!" என்றான் வந்தியத்தேவன்.

"ஐயா! என் உயிரைப் பற்றி இத்தனை நாளும் நான் இலட்சியம் செய்ததில்லை. இன்றைக்குத்தான் கவலை பிறந்திருக்கிறது. இளவரசருக்கு அபாயம் நீங்கும் வரையில் என் உயிருக்கு ஒன்றும் வராது!" என்றாள் பூங்குழலி.

படகு கால்வாய்க்குள் மெள்ள மெள்ளச் சென்றது. சப்தம் சிறிதும் வெளியில் கேளாதபடி மிக மெதுவாகப் பூங்குழலி துடுப்பு வலித்தாள். கால்வாயின் இருபுறமும் இருள் சூழ்ந்திருந்தது கரை ஓரமாக உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் கரிய நிழல்கள் கால்வாயில் விழுந்து அதன் கரிய நீரை மேலும் கரியதாக்கின.

வானத்திலிருந்து விண்மீன்கள் எட்டிப் பார்த்தன. வந்தியத்தேவனைப் போலவே நட்சத்திரங்களும் மிகுந்த கவலையுடன் அப்படகின் போக்கைக் கவனித்ததாகத் தோன்றியது. நீரில் பிரதிபலித்த நட்சத்திரங்கள், கரையிலிருந்த மரங்கள் காற்றில் ஆடிய போது அவற்றின் நிழலும் ஆடியபடியால், அடிக்கடி சலனமடைந்து கொண்டிருந்தன. வந்தியத்தேவனுடைய உள்ளத்தின் சஞ்சலத்தை அவை சரியாகவே பிரதிபலித்தன. ஒரு யுகம்போலத் தோன்றிய ஒரு நாழிகை நேரம் படகு கால்வாயில் சென்ற பிறகு, பூங்குழலி படகைக் கரையோரமாக நிறுத்தினாள்.

பூங்குழலி கால்வாயின் கரைமீதேறிக் காட்டு வழியில் புகுந்து சென்றாள். அதாவது அவளுடைய உடம்பு சென்று கொண்டிருந்தது அவளுடைய உயிர் கால்வாயில் விட்டிருந்த படகிலேயே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அந்த முன்னிருட்டு நேரத்தில் முட்செடிகள், மேடு பள்ளங்கள், காட்டு ஜந்துக்கள் ஒன்றையும் இலட்சியம் செய்யாமல் அதிவிரைவாக நடந்து சென்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## குகையுடன் பேசிய நரி



ஒரு காட்டில் கிரகிரன் என்ற சிங்கம் வாழ்ந்து வந்தது. ஒரு நாள் இரை தேடி காட்டின் பல பகுதிகளிலும் அலைந்து திரிந்தும் அதற்கு ஒரு சிறிய இரை கூடக் கிடைக்கவில்லை. வழியில் ஒரு பெரிய குகையினைக் கண்டது. உடனே, சிங்கத்திற்கு ஒரு யோசனை . பேசாமல் நாம் இந்தக் குகைக்குள் ஒளிந்து கொண்டால், இந்த குகையில் இருக்கும் விலங்குகள் இரை தேடிவிட்டுத் திரும்பி மீண்டும் இங்கே தானே வரும். அப்படி வரும் விலங்குகளை பிடித்து உண்டு விடலாம் என்று நினைத்து அந்தக் குகைக்குள் சென்று படுத்துக் கொண்டது.

அந்தக் குகையில் அவிபுச்சன் என்கிற ஒரு புத்திசாலியான நரி வசித்து வந்தது. தன் குகைக்குத் திரும்பி வந்து தன் குகைக்குள் நுழைய முனைந்த போது குகையின் வாசலில் சிங்கத்தின் காலடித் தடங்கள் இருப்பதனைப் பார்த்து குகைக்குள் சிங்கம் [illegible] வந்திருக்கிறது என்[illegible] அறிந்து கொண்டது. ஆனால் நரிக்கு ஒரு சந்தேகம். சிங்கம் உள்ளே இருக்கிறதா? அல்லது சென்று விட்டதா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காக குகைக்கு வெளியே நின்று கொண்ட நரி, ஏய், குகையே! ஏய், குகையே! என்று அழைத்[illegible] பதனை அறிந்து கொண்டது. அது யாரிடம் பேசுகிறது என்று கவனித்தது.

நரி, மீண்டும், ஏய், குகையே ஏன் மௌனமாக இருக்கிறாய்? என்றது. சிங் கத்திற்கு ஒன்றும் புரிய வில்லை. ஏன் இந்த நரி குகையிடம் பேசுகிறது? என்று யோசித்தது. நரி, குகையே என் மீது ஏதும் கோபமா? நீ தினமும் என்னிடம் பேசுவாயே? இன்று ஏன் என்னுடன் பேசாமல் அமைதியாக இருக்கிறாய்? என்று கேட்டது. அப்போ துதான் சிங்கத்திற்குப் புரிந்தது. அடடா! இந்தக் குகை தினமும் நரியுடன் பேசக் கூடியது போலும். ஆனால், இன்று ஏனோ இது பேசவில்லை என்று நினைத்தது.

நரி, ஏய், குகையே! நீ பேசிய பின்னர் தானே நான் உன்னுள் நுழைவேன். இன்று நீ பேசாமல் இருந் தால் நான் எப்படி உன் னுள் நுழைவேன்? என்றது.

சிங்கம் பதறிப் போனது. அடடா! குகை பேசினால் தான் நரி குகைக்குள் வருமாமே! நரி குகைக்குள் வராவிட் டால் நமக்கு இரை கிடைக்காதே! என்று நினைத்த சிங்கம் குகை போலப் பேசினால், அந்த நரி குகைக்குள் வந்து விடும். நாமும் அதை அடித்துச் சாப்பிட்டு விடலாம்! என்று நினைத்து, ஏ நரியே! நான் வேறு சிந் தனையில் இருந்ததால் உன்னிடம் பேசவில்லை. தவறாக நினைக்காதே. வா உள்ளே! என்று குகை பேசுவது போல பேசி குரல் எழுப்பியது.

அவ் வளவுதான், குகைக்குள் இருந்து சிங்கத்தின் குரல் வெளி வந்ததும் சுதாரித்துக் கொண்ட நரி, தப்பித்தோம் பிழைத்தோம் எனத் தலை தெறிக்க ஓடிப் போனது.

நீதி : எதனையும் செய்வதற்கு முன்பு ஆலோசித்துச் செய்யவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யால் கவரப்பட்டவன் மனம் நல்ல விஷயங்களில் சுவை காணாது. ~ ஹொரேஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதலபாதாளத்தில் வீழ்ந்த இலங்கை பொருளாதாரத்தில் மீண்டெழுந்துள்ளதா?

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீண்டுள்ளதாக ஆளுந்தரப்புக் கூறி வருகிறது. அதேவேளை பொருளாதார நெருக்கடியால் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடந்த இலங்கையை நான் தூக்கி நிமிர்த்தினேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகிறார்.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. அதாவது உண்மையிலேயே இலங்கை, பொருளாதார மந்தத்தில் இருந்து மீண்டுவிட்டதா? பொருளாதார மந்தத்தில் இருந்து மீண்டெழும் அளவுக்கு உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் நாடு முன்னேற்றம் கண்டுள்ளதா? என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்குச் சரியான பதில் கண்டறியப்பட வேண்டும்.

இந்த விடயத்தை நாம் பிரஸ்தாபிப்பதற்குக் காரணம் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ஆம், இலங்கையின் பொருளாதாரம் படுபாதாளத்தில் வீழ்ந்து போனதன் காரணமாக அரசாங்கத்துக்கு எதிராக மக்கள், கிளர்ச்சி கொண்டமை தெரிந்ததே.

இலட்சக்கணக்கான மக்கள் திரண்டெழுந்து ஆட்சித் தலைவர்களை ஓட, ஓட விரட்டினர். அந்த நிகழ்வுக்குப் பின்னர் ஆட்சித் தலைமை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இப்போது வரிசைப் பண்பாடு இல்லாமல் போயுள்ளது. தவிர, பொருட்களின் கிடைப்பனவும் தாராளமயப்பட்டுள்ளது. இவ்வாறு வரிசைப் பண்பாடு இல்லாமல் போனதும் பொருட் தட்டுப்பாடு நீங்குவதுமே நாட்டின் பொருளாதார முன்னேற்றம் எனக் கருதப்படுமாயின், அதைவிட்ட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

உண்மை. பொருளாதார மீட்சி என்பது தேசிய உற்பத்தியோடு நெருங்கிய தொடர்பு கொண்டது.

பொதுவில் கடன்பட்டு நுகர்வு நடத்துகின்ற முறைமை பொருளியலில் உண்டு. இங்குதான் நம் கேள்வி மேலும் தெளிவுபடுத்தப்படுகிறது.

அதாவது மிகப்பெரும் பொருளாதார வீழ்ச்சியில் கிடந்த நாட்டை, வெளிநாடுகளிடம் இருந்தும் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் பெற்றுக் கொண்ட கடன் மூலம் தற்காலிகமாகச் சீர்படுத்த முடியும்.

ஆயினும் அவ்வாறு கடன்படுகை மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்கு முண்டுகொடுக்கப்படுமாயின், அதன் விளைவு மிக மோசமானதாகவே இருக்கும்.

ஆக, கடன்படுகை மூலமாக நாட்டை மீட்பதாக இருந்தால் குறித்த கடன், முதலீடாக - உற்பத்தி முயற்சியாக மாற்றப்பட வேண்டும்.

இதைவிடுத்து பழைய கடனைத் தீர்ப்பதற்கும் நுகர்வுக்குமாக பட்ட கடன் கரையுமாயின் நாடு நடுத்தெருவுக்கு வர அதிக நாட்கள் எடுக்கமாட்டாது.

ஆக, நாட்டை மீட்டேன் என்று ஒரு புறத்தில் ஜனாதிபதி கூற, மறுபுறத்தில் நாடு அதிகமாகக் கடன்படுகிறது. இது மீண்டுமொரு பொருளாதாரப் பெருமந்தத்தை ஏற்படுத்துமென சிங்களப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

எனவே எது உண்மை. எது ஏமாற்று நாடகம் என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

# பொருளாதார நெருக்கடி, கடன் மறுசீரமைப்பை உரியவாறு இலங்கை கையாண்டுள்ளது

## ஜப்பான் பாராட்டு

பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும், கடன்மறுசீரமைப்பு செயன்முறையைப் பூர்த்திசெய்வதிலும் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவா பாராட்டியுள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவாவின் அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கடந்த திங்கட்கிழமை (01) ஜப்பான் சென்றுள்ளார்.

அதன்படி ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் யொகோ கமிகவாவுடனான இருதரப்பு சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) டோக்கியோவில் நடைபெற்றது.

இச் சந்திப்பின் போது பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதிலும், கடன்மறுசீரமைப்பு செயன்முறையைப் பூர்த்தி செய்வதிலும் இலங்கையினால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தனது பாராட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்புத்தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டதுடன், மனிதவளப் பரிமாற்றத்தை வலுப்படுத்துதல் உள்ளடங்கலாக பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு ஏதுவான வாய்ப்புக்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

அத்தோடு உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் குழுவின் உப தலைமை நாடு என்ற ரீதியில் இருதரப்பு கடன்மறுசீரமைப்பு செயன்முறைக்கு ஜப்பானால்வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்களுக்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நன்றி தெரிவித்துள்ளார்.

மேலும், இடைநிறுத்தப்பட்டுள்ள ஜப்பானிய நிதியுதவியின் கீழான செயற்திட்டங்களை மீள ஆரம்பிப்பது குறித்தும், இலங்கையில் ஜப்பானிய முதலீடுகளை ஊக்குவிப்பது குறித்தும் இச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் அலிசப்ரிஅவரது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை சிரேஷ்ட அமைச்சரவை செயலாளர் ஹயாஷி யொஷிமஸாவுடனான சந்திப்பொன்றும் நடைபெற்றதுடன், இதன் போது இருநாடுகளுக்கு இடையில் நிலவும் நட்புறவு குறித்தும், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ம-7,10)

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மறுசீரமைப்பு செய்யப்படும்

### அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் எந்த வகையிலும் விற்கப்படாது என்றும் மறுசீரமைப்பு மட்டுமே செய்யப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப் பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் 49% பங்குகளை வேறு நிறுவனத்திற்கு வழங்க முடியும் எனவும், ஆனால் பொருத்தமான முதலீட்டாளர் இதுவரை முன்வரவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7,10)

## கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்பிலிருந்து கீழே விழுந்த

### 15 வயது மாணவனும் மாணவியும் பலி

(கொழும்பு)

கொழும்பு கொம்பனித் தெருவில் உள்ள சொகுசு அடுக்குமாடி குடியிருப்பின் 67வது மாடியில் இருந்து கீழே விழுந்து 15 வயது மாணவனும் மாணவியும் உயிரிழந்துள்ளனர்.

வெள்ளவத்தை மற்றும் களனி பிரதேசத்தில் வசிக்கும் மாணவனும் மாணவியுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த மாணவனும் மாணவியும் கொழும்பில் உள்ள சர்வதேச பாடசாலை ஒன்றில் ஒரே வகுப்பில் கல்வி பயின்று வருவதாகவும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கொம்பனித்தெரு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், இருவரும் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ம-7,10)

## மருதங்கேணியில் தீயில் எரிந்த குடும்பஸ்தர் மரணம்

### சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ் மருதங்கேணி பகுதியில் தீயில் எரிந்து மரணமான குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்வடமராட்சிகிழக்கு மருதங்கேணிபிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வத்திராயன் பகுதியில் உள்ள வீட்டில் கடந்த 20ம் திகதி இரவு வேளை தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் குறித்த குடும்பஸ்தர் ஒருவர் ஓலமிட்ட போது, மக்களால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த 01ம் திகதி இரவுயாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். (ம-7,10)

## நகுலேஸ்வரக்குருக்கள் ஞாபகார்த்த நூல் வெளியீடு

(கீரிமலை)

பஞ்சாட்சரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயதில் சுமார்? 70 ஆண்டுகளுக்கு மேலாக இறை பணியாற்றிய நகுலேஸ்வரக்குருக்கள் சிவனடி எய்தி முதலாம் ஆண்டு நிறைவையொட்டி ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் அவரது ஞபகார்த்தமாக கிரியாகாண்ட க்ராம வழி,நகுலேஸ்வரர் ஆலய வரலாற்று நூல் வெளியீடும் நேற்று கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறீ சற்குணராஜா ஆகியோரும் கலந்து சிறப்பித்ததோடு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல சிவாச்சாரியார்களும் இவ் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,10)

## கண்ணலிங்கேஸ்வராலய வருடாந்த மகோற்சவம்

வட்டுக்கோட்டை - தெக்கணப்பாய்கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவமானது நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் வெகு விமர்சையாக நடைபெறவுள்ள இவ்வாலய மகோற்சவந்தனில் எதிர்வரும் 11.07.2024 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு வசந்த மண்டபப்பூஜையினை தொடர்ந்து இரதோற்சவமும் இடம்பெறும்.

மறுநாள் ஆனி உத்தர நன்னாளில் நடேசரபிஷேகம், ஆருத்ரா தரிசனம், தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம-7,10)

## ஆயாக்கடவை சித்திவிநாயகருக்கு இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் அருள்மிகு ஆயாக்கடவை சித்திவிநாயகராலய கும்பாபிஷேக தின சங்காபிஷேகமானது இன்று வியாழக்கிழமை பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது.

காலை 6.30 மணிக்கு விஷேட பூஜைகள் நடைபெற்று அதனை தொடர்ந்து விஷேட ஹோமமும் சங்காபிஷேகமும் நடைபெறும்.

மாலை 3.30 மணிக்கு விஷேட பூஜைகளை தொடர்ந்து 4.00 மணியளவில் வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமானுடன் இரு வீதி வலம்வந்து அருள்பாலிப்பார். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பங்களாதேஷ் உருவான கதையும் அந் நாட்டின் தேர்தல்களும் - ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

09

1986 ஆம் ஆண்டு மே 7 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது, இதில் எர்சாத்தின் புதிதாக உருவாக்கப்பட்ட ஜாதியா கட்சி வெற்றி பெற்றது.

### 1986 பங்களாதேசம் பொதுத் தேர்தல்

பங்களாதேசத்தில் 7 மே 1986 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மொத்தம் 1,527 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல்நடைபெற்ற 300 இடங்களில் 153 இடங்களை ஜாதியா கட்சி கைப்பற்றியது. வாக்குப்பதிவு 61.1% ஆகும். 30 இடங்கள் கூடுதலாக பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டன. இவர்கள் பாராளுமன்றத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற பங்களாதேச தேசியவாத கட்சி தேர்தலை புறக்கணித்து. ஆனால் அவாமி லீக் மற்றும் பிற அரசியல் கட்சிகள் போட்டியிட்டன. தேர்தல் நேரத்தில், இராணுவச் சட்டம் நடைமுறையில் இருந்தது மற்றும் எர்சாத் அப்போதும் இராணுவத் தளபதியாக இருந்தார்.

ஒரு பத்திரிகையாளர் உட்பட பிரிட்டிஷ் பார்வையாளர்கள் தேர்தலை "ஜனநாயகத்திற்கான சோகம்" மற்றும் "இழிந்த விரக்தியான பயிற்சி" என்று அழைத்தனர்.

ஓகஸ்ட் 1986 இல், எர்சாத் இராணுவப் பணியில் இருந்து ராஜினாமா செய்தார் மற்றும் ஒக்டோபர் 1986 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது, அதில் எர்சாத் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

### 1986 பங்களாதேச ஜனாதிபதி தேர்தல்

பங்களாதேசத்தில் 15 ஒக்டோபர் 1986 அன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இதன் விளைவாக 1983 இல் இராணுவ சதிப்புரட்சியைத் தொடர்ந்து பதவியேற்ற அப்போதைய ஹுசைன் முஹம்மது எர்சாத் வெற்றி பெற்றார். அளிக்கப்பட்ட வாக்குகளில் எர்சாத் 54.9% வாக்குகளைப் பெற்றார். அளிக்கப்பட்ட வாக்குகள் 84.1% ஆகும். எவ்வாறாயினும், தேர்தல்கள் அனைத்து முக்கிய எதிர்க்கட்சி வேட்பாளர்களாலும் புறக்கணிக்கப்பட்டதால் சர்ச்சைக்குரியதாக இருந்தது மற்றும் முறைகேடுகள் பற்றிய தகவல்களும் இருந்தன.

நியூயோர்க் டைம்ஸ், அரசாங்கம் கூறியதை விட வாக்களித்தோர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்ததாகவும் எதிர்க்கட்சி ஆதரவுடன் நடந்த வேலைநிறுத்தம் காரணமாக டாக்காவில் மிகச் சிலரே வாக்களிக்க முடிந்தது என்றும் தெரிவித்திருந்தது.

தேர்தல் அதிகாரிகள் தாங்களாகவே வாக்குச் சீட்டுகளை பெட்டிகளில் போடுவதையும், "ஒரு பக்கத்தில் உள்ள அனைத்து வாக்குகளும் பதிவானதாக பட்டியலிடப்பட்ட வாக்காளர் தாள்களை நிருபர்கள் பார்த்தனர், அதேநேரத்தில் மற்றொரு பக்கத்தில் உள்ள வாக்காளர்கள் யாரும் வாக்களிக்கவில்லை" என்றும் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்பு மற்றும் பரவலான முறைகேடுகள் பற்றிய அறிக்கைகள் இருந்தபோதிலும் எர்சாத் "இது ஒரு ஜனநாயக அரசாங்கத்தை நோக்கி நாங்கள் கடைசிப் பாலமாக பேச்சுவார்த்தை நடத்திய நாள். தேசத்திற்கான எனது உறுதிமொழி இன்று நிறைவேறியது என்று தனது வெற்றியைக் கூறினார்.

### 1986 ஜனாதிபதி தேர்தலின் பின் நடந்தவை

நவம்பர் 1986 இல், பாராளுமன்றம் அரசியலமைப்பின் ஏழாவது திருத்த மசோதாவை நிறைவேற்றியது, எர்சாத் மற்றும் அவரது ஆட்சியின் இராணுவ ஆட்சியின் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக வழக்குத் தொடரப்படுவதிலிருந்து பாதுகாக்கிறது. மற்றும் நவம்பர் 11 அன்று இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது.

ஜூலை 1987 இல், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து டாக்கா, சிட்டகாங் மற்றும் குல்னாவில் வெகுஜன பொது ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தன. எர்சாத்தின் உத்தரவைத் தொடர்ந்து, கலந்து கொண்ட எதிர்ப்பாளர்கள் மீது காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது, இதனால் பொது மக்கள் உயிரிழந்தனர். மேலும் நாடு முழுவதும் 500 எதிர்ப்பாளர்களை பொலிஸார் கைது செய்தனர்.

ஜூலை 24 அன்று, எர்ஷாத் ராஜினாமா செய்யவேண்டும் என்று, தொழிலாளர்கள்-ஊழியர்கள் ஐக்கிய கவுன்சில் டாக்காவில் 54 மணிநேர பொது வேலைநிறுத்தத்தை செய்ய அழைப்பு விடுத்தது. இது பங்களாதேஷின் வரலாற்றில் மிக நீண்ட பொது வேலைநிறுத்தம்.

எதிர்க்கட்சிகள் நவம்பர் 10 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை நிகழ்த்த திட்டமிட்டனர், இந்த நடவடிக்கைக்கு "டாக்கா முற்றுகை" என்று பெயரிட்டனர். எவ்வாறாயினும், நவம்பர் 29 அன்று திட்டமிடப்பட்ட 72 மணி நேர வேலைநிறுத்தத்தைத் தடுக்கும் முயற்சியாக எர்சாத் 27 நவம்பர் 1987 அன்று அவசரகால நிலையை அறிவித்தார்.

பாராளுமன்றம் டிசெம்பர் 6 அன்று கலைக்கப்பட்டது மற்றும் புதிய பாராளுமன்றத் தேர்தல்கள் மார்ச் 3, 1988 இல் திட்டமிடப்பட்டது. அனைத்து முக்கிய எதிர்க்கட்சிகளும் பங்கேற்க மறுத்த போதிலும் தேர்தல்களுக்கான நடவடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன.

### 1988 பங்களாதேசம் பொதுத் தேர்தல்

பங்களாதேசத்தில் 3 மார்ச் 1988 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. பங்களாதேஷ் அவாமி லீக், பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி, பங்களாதேஷ் கம்யூனிஸ்ட் கட்சி, ஜமாத்-இ-இஸ்லாமி பங்களாதேஷ், பங்களாதேஷ் கிரிஷக் ஸ்ராமிக் அவாமி லீக், தேசிய அவாமி கட்சி (முசாஃபர்) மற்றும் பங்களாதேஷின் தொழிலாளர் கட்சி போன்ற பல முக்கிய கட்சிகளால் தேர்தல் அவை புறக்கணிக்கப்பட்டது. வாக்குப்பதிவு 52.5% என்று கூறப்பட்டது. அளிக்கப்பட்ட வாக்குகளில் 68.4 வீதத்தை ஜாதியா கட்சி பெற்றது. 300 இடங்களில் 251 இடங்களை வென்று ஜாதியா கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

மீதமுள்ள 49 இடங்கள் மற்ற மூன்று அரசியல் கட்சிகள், ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி, பங்களாதேஷ் சுதந்திரக் கட்சி,ஜாதிய சமாஜ் தந்திரிக் தளம் (சிராஜ்), மற்றும் பல சுயேட்சை வேட்பாளர்களுக்கு இடையே பகிர்ந்து கொள்ளப்பட்டன. 30 இடங்கள் கூடுதலாக பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டன. இவர்கள் பாராளுமன்றத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்தத் தேர்தலை ஒரு மேற்கத்திய இராஜதந்திரி "தேர்தலின் கேலிக்கூத்து" என்று வர்ணித்தார்.

நான்காவது பாராளுமன்றம் அரசியலமைப்பின் அசல் மதச்சார்பற்ற தன்மைக்கு முரணாக இஸ்லாத்தை வங்காளதேசத்தின் அரச மதமாக மாற்றிய சர்ச்சைக்குரிய அரசியலமைப்பின் எட்டாவது திருத்தம் உட்பட ஏராளமான சட்ட மசோதாக்களை நிறைவேற்றியது.

1990 ஆம் ஆண்டில், (பின்னர் பிரதமர்களாக இருந்த) கலீதா சியா மற்றும் ஷேக் ஹசீனா தலைமையிலான மக்கள் எழுச்சி, ஜனாதிபதி பதவியிலிருந்து எர்சாத்தை (டிசெம்பர் 6, 1990 இல்) ராஜினாமா செய்ய வைத்தது. மேலும் நாடு பாராளுமன்ற ஜனநாயகத்திற்குத் திரும்பியது, ஜனாதிபதியின் அலுவலகம் பெரும்பாலும் சம்பிரதாயமான ஒன்றாக மாறியது.

இதன்பின், வங்காளத்தேசம் பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிக்கு மாறியது. சியாவின் விதவை மனைவியான, காலிதா சியா பங்களாதேசம் தேசியக் கட்சியை வழி நடத்தி, 1991 பொதுத்தேர்தலில் வெற்றி பெற்றார். இதன்மூலம், பங்களாதேசம் வரலாற்றிலேயே முதலாவது பெண் பிரதமரானார்.

### 1991 பங்களாதேச பொதுத் தேர்தல்

வங்காளதேசத்தில் 27 பெப்ரவரி 1991 அன்று பொதுத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 இடங்களில் 140 இடங்களை வென்று வங்காளதேச தேசியவாதக் கட்சி (BNP) பாராளுமன்றத்தில் மிகப்பெரிய கட்சியாக உருவெடுத்தது. அவர் BNP இஸ்லாமிய கட்சியான ஜமாத்-இ-இஸ்லாமியின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைத்தார், மேலும் மார்ச் 20 அன்று கலிதா ஜியா தனது முதல் முறையாக பிரதமராக பதவியேற்றார்.

பல சர்வதேச பார்வையாளர்களால் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நியாயமாகவும் இருந்ததாக விவரிக்கப்பட்டது. மேலும் 1980களின் பிற்பகுதியில் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குப் பிறகு பங்களாதேஷ் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில் இது முக்கிய பங்கு வகித்தது. வாக்குப்பதிவு 55.4% ஆக இருந்தது.

தேர்தலில் BNP 140 இடங்களை வென்றது, பாராளுமன்ற பெரும்பான்மைக்கு 11 இடங்கள் குறைவு. BNP யின் முதன்மை போட்டியாளர்களான ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் 88 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. இருப்பினும், மக்கள் வாக்குப் பங்கின் அடிப்படையில் இரண்டு முக்கியக் கட்சிகளுக்கு இடையே சிறிய வித்தியாசம் இருந்தது, அவாமி லீக்கை விட BNP 250,000 வாக்குகள் அதிகம் பெற்றது.

30 இடங்கள் கூடுதலாக பெண்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டன. இவர்கள் பாராளுமன்றத்தினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்...

மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது.

சம்பந்தனின் புகழுடல் நேற்று முன்தினம் காலை முதல் நேற்று மதியம் வரை பொரளை ஏ.எப்.ரேமண்ட்ஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பிற்பகல் 2.30 மணியிலிருந்து மாலை 4 மணி வரை பாராளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அன்னாரது புகழுடலுக்கு ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, சம்பந்தன் படித்த பாடசாலைகளில் ஒன்றான யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் அன்னாரின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் ஞாயிற்றுக் கிழமை வரை திருகோணமலையில் அன்னாரது இல்லத்தில் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மாலை 4 மணியளவில் அன்னாரது புகழுடல் தகனக்கிரியைக்காகத் திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. (ம-7,10)

## படகு கவிழ்ந்ததில்...

உயிரிழந்தார்.

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இந்திரலிங்கம் அருண் என்ற 42 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் பொருட்கள் ஏற்றி இறக்கலில் ஈடுபட்ட படகு ஒன்று நான்கு தொழிலாளர்களுடன் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடுக்கடலில் கவிழ்ந்தது. இதனால் படகில் பயணித்த நால்வரும் கடலில் வீழ்ந்தனர்.

அவர்கள் கரை நோக்கி நீந்திய வேளை, கிராம மக்களின் உதவியுடன் மூவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33)

## 3ஆம் கட்ட...

மே மாதம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டு ஜூலை மாதம் 04 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் கூறப்பட்டிருந்தது. இதற்கமைய மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் இன்று இடம்பெற இருக்கிறது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29ஆம் திகதியன்று, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினைப் பொருத்துவதற்காக, கனரக இயந்திரத்தின் மூலம் நிலத்தினை அகழ்ந்த போது மனிதப்புதைகுழியொன்று இனங்காணப்பட்டிருந்தது.

இதனையடுத்து முல்லைத்தீவு நீதிமன்றம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி ஆகியோரின் கண்காணிப்பு மற்றும் பங்குபற்றுதல்களுடன், தொல்லியல் துறைப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் இவ்வாறு இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழி இரண்டு கட்டங்களாக அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு இரு கட்டங்களாக இடம்பெற்ற அகழ்வாய்வுகளின்படி இதுவரையில் குறித்த மனிதப் புதைகுழியிலிருந்து 40 மனித எலும்புக்கூட்டு தொகுதிகளும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு போராளிகள் பயன்படுத்தும் இலக்கத்தகடுகள், துப்பாக்கிச் சன்னங்கள், உடைகள் உள்ளிட்ட பல தடயப் பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

அத்தோடு இரண்டாங்கட்ட அகழ்வாய்வு பணிகளின்போது குறித்த மனிதப் புதைகுழி வளாகம் விசேட ஸ்கேன் கருவிமூலம் ஆய்வு செய்யப்பட்டிருந்தது. குறித்த ஸ்கேன் கருவி ஆய்வின்மூலம் முல்லைத்தீவு - கொக்கிளாய் பிரதான வீதியின் கீழ்ப்பகுதியிலும் மேலும் பல மனித எச்சங்கள் இருப்பதும் கண்டறியப்பட்டிருந்தது. இந்நிலையில் குறித்த மனிதப்புதைகுழி அகழ்வாய்விற்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் முடிவுற்றதால் அகழ்வாய்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழலில் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வாய்வுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீளவும் கிடைக்கப் பெற்றுள்ள நிலையில் மீளவும் இன்று CCTV கமரா, பொலிஸாரின் கண்காணிப்புக்கு மத்தியில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10,299)

## மசகு எண்ணெய்...

ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.24 அமெரிக்க டொலராக உள்ளதுடன் இயற்கை எரிவாயுவின் விலை நேற்றைய தினம் 2.45 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (ம-7,10)

## பண...

மாகப் பதிவான உணவுப் பணவீக்கம் ஜூனில் 1.4 சதவீதமாகவும், மே மாதம் 1.3 சதவீதமாகப் பதிவான உணவல்லாப் பணவீக்கம் ஜூனில் 1.8 சதவீதமாகவும் உயர்வடைந்தன. மேலும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் ஜூனில் 0.77 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. இதற்கு உணவுப் பொருட்களின் விலைகள் மற்றும் உணவல்லாப் பொருட்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்துள்ளது. பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் கடந்த மே மாதத்தில் பதிவான 3.5 சதவீதத்திலிருந்து ஜூன் மாதத்தில் 4.4 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. இது இவ்வாறிருக்க பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உறுதியான பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பவற்றின் மூலம் துணையளிக்கப்பட்டு, பணவீக்கமானது எதிர்வரும் காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தை அடைந்து, நடுத்தர காலத்தில் அம்மட்டத்துக்கு மேல் பதிவாகும் என மத்திய வங்கி எதிர் பார்ப்பு வெளியிட்டுள்ளது. (ம-7,10)

## ஜனாதிபதித்...

என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், குறித்த விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் அறிவிக்கப்படும் வரையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தடையுத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி நேற்று இந்த மனு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 5523 — R 4 2 7 0 0 0
அத சம்பத — R 7 0 0 0 — சீட்டிழுப்பு இலக்கம் 0098

தன நிதானய — திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 1553 — S 06 24 52 60 S — 48893

மெகா பவர் — திகதி 03/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1871 — D 01 24 41 56 66 — 73961

லக்கி 7 VIP — திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 349 — O 8 4 2 0 8 9 0 O

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3765 — சீட்டிழுப்பு திகதி 03.07.2024 — G 10 16 52 60 — G 25612

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.03 — சீட்டிழுப்பு இலக்கம் 0832 — மேஷம் 12 36 50 53 மேஷம் — 22532 — 02

உத்தியோகபூர்வ முடிவுகள் — 03.07.2024 — வெற்றி வாரம் 231 — பச்சை — Z — 8 9 3 7 4 9 — 62267 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,872,944.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2497 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 03.07.2024 — தினம் புதன்கிழமை — 06 29 52 57 W — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,752,191.20

சனிதா — திகதி 2024.07.03 — வெற்றி வாரம் 4658 — 10 35 36 74 G — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,971,016.80 — 78718

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4209 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.07.03 — தினம் புதன்கிழமை — 01 28 37 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,896,533.20 — 343477

W 14 06 08 14 42 — 1673 — 03.07.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 531,069,717.80

ஜயோதா Jayoda — திகதி 2024.07.03 — வெற்றி வாரம் 2039 — வர்ணம் மஞ்சள் — 11 13 34 45 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,197,730.00

அட கோடிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம்: 2323 — சீட்டிழுப்பு திகதி: 2024.07.03 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 124,925,663.20 — 32 36 40 67 J — 356789


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யுக்திய...

அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பியூமி ஹன்சமாலி பாதாள உலக தலைவர் ஒருவரின் பணத்தை பயன்படுத்துவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அதன்படி, அவரது சொத்துக்கள் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும், அவர் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க வாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

எவ்வாறான அச்சுறுத்தல்கள் வந்தாலும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகத்தை அடக்கி யுக்திய நடவடிக்கையை மக்கள் உணரும் வகையில் இன்று முதல் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், குறுகிய காலத்தில் பல கோடி ரூபாவை சட்டவிரோதமாகவும் சந்தேகத்திற்கிடமாகவும் சம்பாதித்த மாடல் அழகி பியூமி ஹன்சமாலி நடத்தும் அழகுசாதனப் பொருட்கள் அவரது நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டதா என்பது குறித்து இரகசியப் பொலிஸ் பிரிவின் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அழகுசாதனப் பொருட்கள் தயாரிக்கப்படும் இடங்கள் தொடர்பான தகவல்களை வெளிக் கொண்டுவர குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர, பியூமி ஹன்சமாலி நடத்தும் இந்த வியாபாரத்தின் மூலம் வருமான வரி செலுத்துதல் மற்றும் நடத்தப்பட்ட வியாபார கணக்குகள் குறித்தும் அந்த பிரிவு விசாரணை நடத்தி வருவதாக கூறப்படுகிறது. (ம-7,10)

## கருங்குளவி...

3 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த பெண் நேற்று முன்தினம் அவரது வீட்டுக்கு அருகேயுள்ள காணிக்குள் சென்று பனையோலை எடுத்த வேளை அதனுள் இருந்த கருங்குளவி அவர்மீது கொட்டியது. இந்நிலையில் அவர் சங்கானை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,10)

## இலங்கை...

தெரிவித்ததாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிலையான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளி விவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகுச் சேவை மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7,10)

## வரலாற்று...

பிரிட்டனின் பாராளுமன்ற தேர்தலிற்கு முன்னதாக தமிழ் கார்டியனில் எழுதியுள்ள கட்டுரையில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்சமூகத்தின் நீண்டகால சகா என்ற அடிப்படையில் தமிழ் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவது குறித்தும் பகிர்ந்துகொள்ளப்பட்ட விழுமியங்கள் பரஸ்பர மதிப்பு நீதி மற்றும் செழிப்பு ஆகியவற்றிற்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக போராடுவது குறித்தும் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நாங்கள் மிக முக்கியமான தேர்தலை நெருங்கும் இவ்வேளையில் நாங்கள் ஒன்றிணைந்து சாதித்த முன்னேற்றங்கள் குறித்தும் முன்னோக்கி பயணிப்பதற்கான பாதை குறித்தும் தமிழ் சமூகம் சிந்திப்பது அவசியமாகும்.

தமிழ் மக்களிற்கான தொடர்ச்சியான அர்ப்பணிப்பை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெளிப்படுத்திய கென்சர்வேட்டிவ் கட்சிக்கு வாக்களிக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன். இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற சம்பவங்களிற்கு ஐக்கிய நாடுகளில் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளிற்கு பிரிட்டன் தலைமை தாங்கிவந்துள்ளது.

இந்த கொள்கைகளிற்கான எங்கள் அர்ப்பணிப்பு குறையவில்லை தடம் மாறவில்லை. இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் பாரப்படுத்துவது குறித்த துணிச்சலான வாக்குறுதிகளை தொழில் கட்சி வழங்கியுள்ள அதேவேளை உண்மையான மாற்றத்திற்கு சொல்லாட்சியை விட அதிகம் தேவை என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

மேலும் சர்வதேச அரங்கில் நிலையான பயனுள்ள நிலையான நடவடிக்கை அவசியம். இவ்வாறான நடவடிக்கைகளை கென்சர்வேட்டிவ் கட்சி தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது. தொடர்ந்தும் முன்னெடுக்கும். உதாரணத்திற்கு எங்களின் 11மில்லியன் யூரோ இலங்கையின் யுத்தத்தின் பாரம்பரியத்திற்கு தீர்வை காண்பதற்கு உதவும். மேலும் இந்த நிதி உதவி சிவில்சமூகத்திற்கு உதவும் ஜனநாயக செயற்பாடுகளிற்கும் உதவும். தமிழர் நினைவுநாள் என்பது உயிர் இழந்தவர்களின் நினைவுகளை போற்றும் மற்றும் தமிழ் சமூகத்தின் தொடரும் வேதனையை அங்கீகரிக்கும் ஒரு புனிதமான நிகழ்வாகும். எங்களை துயரத்திலும் நீதியை காண்பதற்கான உறுதிப்பாட்டிலும் இணைக்கும் நாள் கென்சர்வேட்டிவ் கட்சி இந்த நாளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து உங்களுடன் இந்த நாள் குறித்த நினைவிலும் உறுதிப்பாட்டிலும் உங்களுடன் இணைந்துள்ளது.

தமிழர்களின் உரிமைகளை ஆதரிப்பதிலும் வரலாற்று அநீதிகளிற்கும் எங்களின் அர்ப்பணிப்பு உறுதியாக உள்ளது. மேலும் இந்த ஆண்டு நினைவுகூரல் நிகழ்வில் கலந்துகொண்டது குறித்து பெருமிதம் கொள்கின்றேன். (ம-7,10)

# அரச சொத்துக்களை விற்றால் மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்

## நாமல் எம்.பி தெரிவிப்பு



அரச சொத்துக்கள் மறுசீரமைக்கப்பட்டாலோ அல்லது விற்பனை செய்யப்பட்டாலோ, அதற்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்களோ அல்லது தனிநபர்களோ அந்த அரச நிறுவனங்களை என்ன செய்ய போகிறார்கள் என்பதை உடனடியாக நாட்டுக்கு தெரிவிக்க வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபகஷ தெரிவித்துள்ளார்.

மத்தள விமான நிலைய ஹில்டன் ஹோட்டலை இவ்வாறு புனரமைக்க வேண்டுமாயின் அதில் முதலீடு செய்ய வந்தவர்கள் அந்த நிறுவனங்களை வழங்குவதில் பின்பற்றப்பட்ட நடைமுறை என்ன, தீர்மானம் எடுத்தவர்கள் என்ன கருதினார்கள் என்பதை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் நாமல் ராஜபகஷ மேலும் தெரிவித்துள்ளார்.

அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதாக இருந்தால் பொருத்தமான நிறுவனங்களுக்கோ அல்லது தனிநபர்களுக்கோ வழங்கப்பட வேண்டுமெனவும், அவை மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் செய்யப்பட வேண்டுமென நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தினார்.

வெளிப்படைத்தன்மை இல்லாத அவசர ஒப்பந்தங்களுக்கு தாம் எதிரானவர் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசாங்க நிறுவனங்களை விற்பது தனது மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கையல்ல எனவும் நாமல் ராஜபகஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

புலோலி காட்டுப்பகுதியில்

# ஒரு கிலோ கஞ்சா போதைமாத்திரைகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பருத்தித்துறை - புலோலி காட்டுப் பகுதியில் மறைத்து வைத்திருந்த போதைப் பொருட்கள் ஒருதொகை மீட்கப்பட்டன.

இதன்போது ஒரு கிலோ எடையுடைய கேரளக் கஞ்சா, 290 போதை மாத்திரைகள் மற்றும் தராசு ஒன்று என்பன மீட்கப்பட்டன.

இருப்பினும் சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை. பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0732)
076 825 7716 (ஆகாஸ்)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (06.07.2024)
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 06.07.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 - 17.08.2024)
Certificate Course in English
Further Details : Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917
(C-0718)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0733)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(126)

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0733)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-0733)

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் (ஆண்) தேவை.
076 561 7856
(C-0734)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org